ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்
கொழும்பு
ஊடக அறிக்கை
பொது அலுவல்கள் பிரிவு
தொலை பேசி: +94 (11) 249-8100 ● தொலை நகல்: +94 (11) 244-9070
மின்னஞ்சல்: AngelicaB@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

இலங்கைக்கு அண்ணளவாக 800,000 Pfizer-BioNTech தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்கும் அமெரிக்கா

ஒக்டோபர் 1, 2021

கொழும்பு, இலங்கை — கொவிட்-19 இற்கெதிரான போராட்டத்தினைத் தொடர்வதற்காக அண்ணளவாக 800,000 பைசர்-பயோஎன்டெக் (Pfizer-BioNTech) தடுப்பூசி மருந்தளவுகள், அமெரிக்க மக்களின் அன்பளிப்பாக இவ்வாரம் இலங்கையை வந்தடைந்தன. அமெரிக்காவால் நன்கொடையாக வழங்கப்பட்டு, COVAX ஊடாக விநியோகிக்கப்படும், இந்த பாதுகாப்பான மற்றும் பயனுறுதியுள்ள தடுப்பூசிகள், உயிர்களைப் பாதுகாப்பதுடன் இலங்கையில் கொவிட்-19 தடுப்பூசியேற்றல் பாதுகாப்பினையும் அதிகரிக்கும்.

"பொதுச் சுகாதாரத்தினைப் பேணுவதில் இலங்கையின் அர்ப்பணிப்பை நான் மெச்சுகிறேன். தடுப்பூசியேற்றல் பாதுகாப்பினை அதிகரிப்பது இப்பெருந்தொற்றினை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு மிகமுக்கியமான படியாகும்" என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் கூறினார். "இந்த நன்கொடையானது, விசேடமாக ஆரோக்கியச் சிக்கல்கள் உள்ள இளையோருக்கு பாதுகாப்பான மற்றும் பயனுறுதியுள்ள தடுப்பூசிகளை வழங்குவதில் இலங்கைக்கு உதவும். இது இலங்கையின் எதிர்காலத்தின் மீது நாம் மேற்கொள்ளும் எமது தொடர்ச்சியான முதலீட்டை

பிரதிபலிக்கிறது மற்றும் இலங்கை மக்களுக்கு எவ்வித செலவுகளும் இன்றி இவை வழங்கப்படுகின்றன." என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இவ்விநியோகமானது அமெரிக்காவால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட மொத்தத் தடுப்பூசிகளின் எண்ணிக்கையை கிட்டத்தட்ட 2.4 மில்லியனாக அதிகரிக்கிறது. இப்பெருந்தொற்று ஆரம்பித்ததிலிருந்தே, அமெரிக்கா இலங்கை சுகாதார அமைச்சுடன் இணைந்து அவசர விநியோகங்கள் மற்றும் முக்கியமான சேவைகள் வடிவில் 17.9 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான உதவிகளை வழங்கியுள்ளது. கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகவும், இலங்கை மக்களின் அவசர சுகாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகவும், இப்பெருந்தொற்றின் எதிர்மறையான பொருளாதாரத் தாக்கங்களைத் தணிப்பதற்காகவுமான இந்த உதவிகள் இலங்கையின் 25 மாவட்டங்கள் மற்றும் ஒன்பது மாகாணங்களிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களைச் சென்றடைந்துள்ளது.

செப்டம்பரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில், 1.1 பில்லியன் Pfizer-BioNTech தடுப்பூசிகளை தேவைப்படும் நாடுகளுக்கு இலவசமாக வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோசப் ஆர். பைடன் அறிவித்தார். பொதுச் சுகாதார உதவிகளை வழங்குவதில் உலகளாவிய தலைவராக, அமெரிக்கா ஏற்கனவே உலகளாவிய ரீதியில் 160 மில்லியனுக்கும் அதிகமான கொவிட்-19 தடுப்பூசிகளை வழங்கியுள்ளது. ஏனைய நாடுகள் அனைத்தும் வழங்கியதை விடவும் அதிகமான தடுப்பூசிகளை அமெரிக்கா நன்கொடையாக வழங்கியுள்ளது. அவ்வாறே, உலகளாவிய தடுப்பூசி முன்முயற்சியான COVAX இற்கான மிகப்பெரிய நன்கொடையாளராகவும் அமெரிக்கா இருப்பதுடன் இப்பெருந்தொற்றினை முடிவுக்கு கொண்டு வந்து ஒரு சிறந்த உலகை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக உலக நாடுகளுடன் இணைந்து பணியாற்றுவதில் அமெரிக்கா பெருமையடைகிறது.

உயிர்களைக் காப்பாற்றுவதற்கும் உலகப் பொருளாதாரத்தை மீளஆரம்பிப்பதற்கும் மட்டுமன்றி, செய்வதற்கு மிகச்சரியான விடயமும் அதுவேயாகும் என்பதனால், உலகளாவிய கொவிட்-19 இற்கான பதிலளிப்பினை அமெரிக்கா முன்னின்று வழிநடத்துகிறது. இப்பெருந்தொற்றினை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக இலங்கை சுகாதார அமைச்சு, யுனிசெஃப் (UNICEF), உலக சுகாதார அமைப்பு மற்றும்

ஏனையோருடனான எமது பங்காண்மையில் நாம் உறுதியுடன் உள்ளோம்.